# பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

**கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**

# வெற்றிடம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் பதவி

## *சட்டம் மற்றும் அமுலாக்கல் (HM 1-1) – பதவி - 01*

**பணி விபரம்**

எந்த ஒரு நீதிமன்றத்தின் முன்னும் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தல், அதிகாரசபை சார்பில் செயற்படல் அல்லது அதிகாரசபை வழக்குத் தொடர்பில் அறிவிப்பை பெறுதல், அவசியமானது எனக் கருதப்படும்போது அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி நீதிமன்றத்தில் சமுகமளித்தல், சட்டத்தின் மூலம் விபரிக்கப்பட்டவாறு அதிகாரசபையின் இணக்கம் மற்றும் அமுலாக்கல் செயற்பாடுகளை முன்னெடுத்தல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உத்தரவுடன் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் இணங்க தவறும் பட்சத்தில் சட்டத்தின் மூலம் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக அவ்வாறான சம்பவங்களை விசாரித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல், தேவை ஏற்படும்போது சட்டமா அதிபர் திணைக்களம், ஏனைய சட்ட ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல், சட்டத்தில் கூறப்பட்டவாறு, உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர் அல்லது உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர்களின் எந்த ஒரு சங்கத்துடனும் அதிகாரசபை மூலம் உடன்பாடு ஒன்றுக்கு செல்வதை தயார்செய்தல் மற்றும் அமுல்படுத்தலுக்கான பொறுப்பு, அதிகாரசபை மற்றும் அதிகாரசபையால் நிறுவப்பட்ட ஏனைய சட்ட செயற்பாடுகள் மூலம் விடுக்கப்படும் அனைத்து உத்தரவுகள் தொடர்பான பதிவுகளை பராமரித்தல், நுகர்வோர் முறைப்பாட்டு பிரிவின் செயற்பாடுகளை கண்காணித்தல், அதிகாரசபை மூலம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலை தயாரித்தல், அதிகாரசபையின் மாவட்ட அலுவலகம் மூலம் கையாளப்படும் சட்ட விவகாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல், கட்டளைகள் மற்றும்/ அல்லது ஒழுங்குமுறைகளின் மூலம் நிர்ணயிக்கப்படும் சட்டம் மற்றும் வழிகாட்டல் விளக்கங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஊழியர்களுக்கு விளக்கம் அளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கல், அதிகாரசபையின் ஏனைய அனைத்து பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளை வழங்கல், பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு உதவிச் சேவைகளை வழங்கல், பாவனையாளர் பாதுகாப்பு மற்றும் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளை கையாள்வது தொடர்பில் சர்வதேச அரங்கில் முன்னெடுக்கப்படும் சட்ட முன்னேற்றங்கள் குறித்த தொடர்ச்சியான அறிவை பெற்றிருத்தல், அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் உறுப்பினர்களுக்கு உதவி செய்தல்,

i. வழக்குடன் தொடர்புடைய எந்த ஒரு விடயம் தொடர்பிலும் தெளிவு கூறல்
ii. வியாக்கியானங்கள் வழங்குதல்
iii. ஒரு கட்டுப்பாட்டாளராக கொள்கை முடிவுகளை ஏற்பதில் கருத்துகளை முறைப்படுத்தல்
iv. ஊழியர், தொழிலாளர், நலன்புரி இழப்பீடு அல்லது ஒழுக்காற்றில் தொடர்புபட்ட வேறு சகிப்புத்தன்மை மற்றும்
v. அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் அல்லது நலன்களை நேரடியாக உள்ளடக்கிய வேறு ஏனைய உள்ள விவகாரங்கள்.

**தகைமைகள்**

**வெளிவாரி:** சட்டத்தரணி மற்றும் பட்டப்பின்படிப்புத் தகைமையுடன் (முதுமாணி) சத்தியப் பிரமாணத்தின் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் 15 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி:** பதவிக்குத் தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் I முகாமைத்துவ பிரிவு பதவி ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு:** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் அடிப்படையில் -

HM 1-1 2016: ரூபா (81,670 – 15 x 2,270 – 115,720)

கொடுப்பனவுகள்: சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, தொழில்முறை கொடுப்பனவு மற்றும் தொடர்புடைய அரச சுற்றுநிருபங்கள் அடிப்படையில் வேறு ஏதேனும் பொருந்தக்கூடிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு: அலுவலக வாகனத்தை பயன்படுத்துவதற்கு அல்லது மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவு 50,000 ரூபா மற்றும் 120 லீட்டர் எரிபொருள் கொடுப்பனவுக்கு தகுதிபெறுவர்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**பொது நிபந்தனைகள்:**

**ஆட்சேர்ப்பு சம்பளம்:**

வெளிவாரி ஆட்சேர்ப்புக்கு உட்படுபவர்கள் சம்பள அளவின் முதல் படியில் வைக்கப்படுவர். உள்வாரியாக ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தப்படுபவர்களின் சம்பளம், தாபன விதிக் கோவை – I இன் அத்தியாயம் VII ஏற்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் தொடர்புடைய அரச சுற்றுநிருப விதிகளுடன் நிரந்தரமானதும் அமைய பெற்றதுமாகும்.

வெளிவாரி அபேட்சகர்கள் மூன்று ஆண்டு கால தகுதிகாண் காலத்தைக் கொண்டதாக பதவிக்கு நியமிக்கப்படுவர்.

**ஏனையவை**

இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

பதவிக்கான பணியை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய அபேட்சகர்கள் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் 2021.07.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர். விண்ணப்பத்துடன் தகைமையை நிரூபிக்கும் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அரச துறையின் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்கள் தமது நிறுவன பணிப்பாளர் ஊடாக அனுப்புதல் மேலுள்ள தேவைகளை நிறைவு செய்யாத, முழுமைபெறாத விண்ணப்பங்களும், இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். ஆதரவு திரட்டல் தகுதியிழப்பாக கருதப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பின்வரும் முகவரிக்கு உங்களது விண்ணப்பங்களை அனுப்பவும்;

**பணிப்பாளர் நாயகம்**

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**

**2ஆவது மாடி, ச.தொ.ச. செயலக கட்டிடம்,**

**இல. 27, வொக்ஷல் வீதி, கொழும்பு 02.**